கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்.

**முன்னிலை: திரு. G.சரண்,B.L.,P.G.D.E.L.,,**

கூடுதல் மாவட்ட நீதிபதி **(மு.கூ.பொ),** திண்டுக்கல்

2025-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.107/2015**

**CNR.No.TNDG01- 001416 -2015**

சின்னமாதா நாயக்கர் ......வாதி

*எதிர்*

1. பொம்முத்தாய்
2. சாமியப்பன் (எ) தங்கப்பாணடியன்
3. பந்தி பொம்முத்தாய் (எ) ராஜம்மாள்*
4. அம்மனி
5. சாமிக்கண்ணு
6. சிவபாண்டி
7. B.தங்கராஜ்*
8. T.சிவக்குமார்*
9. T.ராஜேந்திரன்*
10. T.தனலெட்சுமி*

(Amended as per the order in IA.No.1/2021 dated 11.11.2021.) ---பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.முத்துவேல் அவர்கள் ஏற்கனவே ஆஜராகியும், இன்று நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகவில்லை என்பதாலும், 1 முதல் 3ஆம் பிரதிவாதிகள் தரப்பில் திரு.ஜஹாங்கீர் அவர்களும் ஏற்கனவே ஆஜராகியும், 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் S.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும்,7 பிரதிவாதி தரப்பில் அறிவழகள் அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் S.ஹரிஹர ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 5ஆம் பிரதிவாதி ஏற்கனவே ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராகப்பட்ட நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதிக்குரிய 1/3 பங்கு (மூன்றில் ஒரு பங்கு) பாகத்தை நயம், இடர் பார்த்து பரித்து தனித்த சுவாதீனம் ஒப்டைக்க வேண்டி முதல் நிலை தீர்ப்பாணை வழங்கியும், அதே

பரிகரத்திற்கு பின்னிட்டு இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கியும், அதே பரிகாரத்திற்கு பின்னிட்டு இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கியும், 2 ஆம் பிரதிவாதிக்கு பெரியமாத நாயக்கர் கடந்த 23.11.2012-ம் தேதியன்று செய்து கொடுத்த ஆவண எண்-1089/2012-ஐ கிரைய ஆவணமாக எழுதப்பட்டு செந்துரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஷை ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், 1,2-ம் பிரதிவாதிகள் கடந்த 25.11.2013-ம் தேதி 3 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவண எண்-905/2013-ஐ செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதப்பட்டு செந்துரை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஷை ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் முறையாக பாகப்பிரிவினை செய்து கொள்ளாமல் பிரதிவாதிகள் 3-ம் தரப்பினர்களுக்கு எவ்வித ஈடு, ஒத்தி, கிரையம் போன்ற எவ்வித வில்லங்கங்களும் செய்யக்கூடாது என (Not to Alienate) இவ்வழக்கு முடியும் வரை நிரந்தர நிலைஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா வழக்கின் செலவுத் தொகையை வாதிகளுக்கு பிரதிவாதிகள் செலுத்தி வைக்க தீர்ப்பு வழங்கவும், வாதிகளால் சி.பி.சி.கட்டளை 7 விதி 1 ன் படி பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**Today posted for appearance of PW1 and cross by D1-3,4,5,7,8,9 and 10. Sufficient time given for appearance of PW1. This case of 9 years old. Hence suit is dismissed for default. No cost.**

2025-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.04.29 17:40:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(மு.கூ.பொ),
திண்டுக்கல்.